Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 191/2018

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father/Husband Name | : முத்துசாமி |
| Age | : | Calling | : |
| Date | : 10.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 day of 02.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது தமிழக காவல் துறையில் பணியாற்றி தென்காசி மாவட்டத்தில் குடியிரந்து வருகிறேன். நான் மேலவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 06.04.2015 ம் தேதி 19.00 மணிக்கு நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது ராஜா என்பவர் கொடுத்த எழுத்துபூர்வமான புகாரை பெற்று அதன் புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 78/2015, இதச பிரிவுகள் 379 இதசன்கீழ் எதிரிமீது வழக்கு பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெருமாள் மற்றும் ஜெயராம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

சம்பவ சாட்சிகளான ராஜா, சின்னம்மாள், த/பெ.சின்னடைக்கன், அழகு, சின்னையா, சதீஷ், மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான பெருமாள்,

ஜெயராம் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**(எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**